குருபாதம்

# ஞானசம்பந்தம்

## தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 38 ] சித்தார்த்தி ஆண்டு சித்திரைத்திங்கள் 10—5—79 [ இதழ் 6

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

குருபூஜைவிழா 17–5–79

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 38 | 10-5-79 | இதழ் 6

## உட்பொருள்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | திருத்தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில் பெருவிழா அழைப்பிதழ் திருநெறிய தெய்வத்தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகன் | க |
| 2 | தருமைக்கு வாருங்கள் ... | 241 |
| 3 | "எடுத்துச் சுமப்பான்" | 244 |
| 4 | உயிர் ... | 247 |
| 5 | திருவைகல்மாடக்கோயில் தலச்சிறப்பு ... | 251 |
| 6 | செய்திகள் ... | 255 |
| 7 | எதிர்காலம் ... | 257 |
| 8 | பார்வையாளர் குறிப்பு ... | 246 |


உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—★—

எவ்விதையை மாக்கள்பயிர்
இட்டார் இட்டவரே
அவ்விதையின் போகம்
அருந்துதல்போல்—செவ்விதாய்
துன்மார்க்கம் செய்வார்க்குத்
தோன்றும் பிறப்புமுத்தி
சன்மார்க்கஞ் சொக்கநா தா.

— சொக்கநாத வெண்பா. 52

ஆசிரியர் :-

வித்துவான்

**இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**

துணையாசிரியர் :-

மகாவித்துவான்

**சி. அருணவடிவேல் முதலியார்.**



உ

குருபாதம்

**திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்**

**ஸ்ரீ ஞானாம்பிகை உடனாகிய ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயில்**

# பெருவிழா அழைப்பிதழ்

---

பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் மீது வைத்த எல்லையில்லாப் பெருங்கருணையினாலே, காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நிகழ் குறியாம் சிவலிங்கமாதி திருவுருக்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற தலங்கள் பலவற்றுள் இந்திரன், அகத்தியர், தருமன் ஆகியோர்களால் பூசிக்கப் பெற்றதும், காவிரி முதலிய தீர்த்தங்களால் சிறப்புற்றதும், வில்வாரண்யம் என்னும் திருநாமம் உற்றதும் ஆகிய சிறப்புக்களை உடையது **தருமபுரம்.** இத்தலத்தில் ஸ்ரீ ஆலவாய்ச் சொக்கநாதப் பெருமான் திருவருளையும், கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசதேசிகர் அருளையும் நிரம்பப் பெற்றுத் திகழ்ந்த ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் தம் குருமூர்த்திகளது அருளாணையின்படி சைவ பரிபாலனம் என்றும் நிகழ்ந்து வருவதற்குரிய ஞானபீடத்தை இங்கு நிறுவி வீற்றிருந்து ஜீவசமாதி கூடிய கோயிலே **ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில்.** இதன்கண் எழுந்தருளியிருக்கும் **ஸ்ரீ ஞானாம்பிகை உடனாகிய ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமிக்கு** நிகழும் **சித்தார்த்தி ஆண்டு சித்திரைத்திங்கள் 25-ஆம்நாள் (8—5—1979) செவ்வாய்க்கிழமை** தொடங்கிப் பெருவிழா நடைபெறும்.

இந்நாட்களில் **திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடும், சமயப் பயிற்சி வகுப்பும்** நடைபெறும். சிவநேசச் செல்வர்கள் யாவரும் வந்திருந்து திருவிழாக் காட்சியைத் தினமும் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் நலம் பெறுவார்களாக.

தருமையாதீன
மடாலயம்,
சித்தார்த்தி - சித்திரை

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
கார்பார்
**சொக்கநாதத் தம்பிரான்.**

சிவமயம்

# ஸ்ரீ ஆதிபரமாசாரிய மூர்த்திகள் சரிதம்

பாண்டிய நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் சைவ வேளாள மரபில் ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளை மீனாட்சியம்மை என்னும் பெற்றோர்க்கு அரும்பெறற் புதல்வர் ஒருவர் சோம வார சுபதினத்தில் தோன்றினார். பிள்ளைத் திருநாமம் ஞானசம்பந்தர் என்பது. இளமையிலேயே கல்வியில் குறைவில்லாது நிரம்பினார். பெற்றோர் தம் ஆன்மார்த்த மூர்த்தியாம் ஸ்ரீ சொக்கலிங்கத்தை வழிபட மதுரை சென்றபொழுது உடன்சென்ற ஞானசம்பந்தர் **"உண்மை அம்மை அப்பர் அங்கயற்கண்ணியும் ஆலவாய் அரனுமே"** என்று சொல்லிப் பெற்றோருடன் ஊர் திரும்ப மறுத்து மதுரையிலேயே இருந்தார்.

நாள்தோறும் பொற்றாமரைத் தீர்த்தத்தில் மூழ்கிக் காலந் தோறும் ஸ்ரீ சொக்கநாதரை வழிபட்டு வந்தார். பொற்றாமரைத் தீர்த்தக் கரையில் சிவனடியார் பலர் நீராண்ட புரோதாயம் ஆடி, தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ் வடமும் உடையவர்களாய் நாயகன் சேவடி தைவரும் சிந்தையுடன் அமர்ந்து நைந்துருகும் அன்போடு சிவபூஜை செய்தனர். அவ்வடியார்களது செயலில் ஒருநாள் ஞானசம்பந்தரது உள்ளம் ஈடுபட, முற்பிறப்பின் பூஜை உணர்வு அவருக்கு முகிழ்த்தெழுந்தது. ஆலவாய் அப்பனை, ஆன்மார்த்த மூர்த்தியாகப் பூஜிக்கஅளவிலா ஆர்வங்கொண்டு அப்பெருமானைவேண்டினார். அப்பெருமான் அவரது கனவில் தோன்றி, 'முற்பிறப்பில் உன்னால் பூஜிக்கப்பெற்று வந்த நாம், பூஜைப்பெட்டகத்துடன் பொற்றாமரைத் தீர்த்தத்துள் ஈசானத்திசையில் இருக்கின்றோம்; மூழ்கிப் பெறுக' என்று அருளிச்செய்தார். ஞானசம்பந்தர் அங்ஙனமே மறுநாள் பொற்றாமரைத் தீர்த்தத்தில் மூழ்கி, ஆன்மார்த்த மூர்த்தியைப் பெற்று ஆனந்தபரவசம் உற்றார். பின்னர், ஸ்ரீ சொக்கநாதர் சந்நிதியில் சென்று "பெருமானே! பூசிக்கும் நெறியை அருள்புரிய வேண்டும்" என்று வேண்டினார். அன்று இரவு பெருமான் கனவில் தோன்றி. **"திருவாரூர் ஞானப்பிரகாசனிடம் ஞானோபதேசமும் சிவபூஜையும் பெறுக"** என்று பணித்தருளி ஞானபிரகாசரது கனவிலும்சென்று, "உன்னிடம்

வருகின்ற நம் ஞானசம்பந்தனுக்கு விதிப்படி சிவஞானோப தேசம்செய்து சிவபூஜையும் எழுந்தருளப்பண்ணி வைப்பாயாக" என்று சொல்லி மறைந்தருளினர்.

திருவாரூரில் சித்தீச்சரத்தில் தென்முகக்கடவுளின் திருமுன்பு சீடரின் வருகையை ஞானப்பிரகாசர் எதிர்நோக்கியிருந்தார். அருளாணையின்படி ஞானசம்பந்தர். கமலையை அடைந்து குருமூர்த்தியைக் கண்டதும், காந்தம் கண்ட இரும்புபோல் அவர்வசமாகி, சிவதீக்ஷையும், சிவபூஜையும் பெற்றார். பின்பு அவர் நாள்தோறும் ஸ்ரீ சொக்கலிங்கத்தைப் பூஜித்துப் பாடியதே சொக்கநாத வெண்பா. அவர் செய்த குருதோத்திரமே ஞானப்பிரகாசமாலை. ஒரு நாள், ஞானப்பிரகாசர் பூங்கோயில் வழிபாட்டினை முடித்து மீள்கையில், கைவிளக்கு எடுப்போன், அங்கு இல்லாமைகண்டு, ஞானசம்பந்தர் தாமே அப்பணியினை மேற்கொண்டு செல்ல, சிவத்தியான உள்ளத்துடன் இல்லம் செல்லும் குருமூர்த்திகள் இல்லத்தை அணுகியபொழுது 'நிற்க' என்று சொல்லி உள்ளேசென்றார், குருவாணையைக் கடவாத ஞானசம்பந்தர் கைவிளக்கோடு வெளியிலே நின்றிருந்தார். மழை வந்தது. ஓர் அடியும் அப்புறம் பெயர்ந்திலர். மழை அவருக்கு மூன்றடி அப்பாற் சூழ்ந்தே பெய்தது. மறுநாட் காலையில் குருபத்தினியார் கண்டார். குருமூர்த்தியும் கேட்டு வந்து, 'நீர் குவலயத்திற்கு உண்மை விளக்கும் குருவாயினீர்; தனியிடத்தில் இருந்து உம்மை நாடி ஓடிவரும் காரணர்க்கு உண்மை வைத்துச் சமய பரிபாலனம் புரிக' என்றருளினர். சீடர்,

"கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை கண்டதுண்டோ
எனக்கும் உடற்கும் எனதிச்சையோ? இணங்கார்புரத்தைச்
சினக்கும் கமலையுள் ஞானப்ர காச சிதம்பர இன்று
உனக்கிச்சை எப்படி? அப்படியாக உரைத்தருளே"

என்று வேண்டினர். அதுகேட்டுக் குருமூர்த்திகள் "தருமபுரம் செல்க" எனப் பணித்தருளினர்.

ஞானசம்பந்தர் அன்றுமுதல் குருஞானசம்பந்தராகித் தருமபுரத்தை அடைந்து சமய பரிபாலனம் புரிந்தார்; ஞான நூல்கள் பல அருளினர்; ஆனந்தபரவசர் முதலிய பலர்வழி ஞான பரம்பரையை உலகில் நிலவச் செய்தருளினர். அவரே தருமபுர ஆதீன ஞானபீடத்தின் ஆதிபரமாசாரிய மூர்த்திகள்.

---

உ

# திருநாள் விபரம்

| தமிழ்த் தேதி | ஆங்கிலத் தேதி | கிழமை | திரு நாள் | விபரம் |
|---|---|---|---|---|
| 24 | 7—5—79 | திங்கள் | | காலே கணபதி ஹோமம். மாலே உத்திர நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் மணி 6-45க்குமேல் 8-க்குள் விருச்சிக லக்னத்தில் அனுக்ஞை, விக்னேஸ்வரபூஜை, வாஸ்து சாந்தி, மிருத்ஸங்கிரஹணம், அங்குரார்ப்பணம், ரக்ஷா பந்தனம். |
| 25 | 8—5—79 | செவ்வாய் | 1 | உத்திர நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் காலே மணி 8-18 க்குமேல் 10-24 க்குள் மிதுன லக்னத்தில் ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி மஹாத்துவஜாரோகணம். |
| 26 | 9—5—79 | புதன் | 2 | க்ற்பக விருக்ஷக் காட்சி. |
| 27 | 10—5—79 | வியாழன் | 3 | பூதம், பூதகி, இடும்பவாகனக் காட்சி. |
| 28 | 11—5—79 | வெள்ளி | 4 | நந்தி, காமதேனு, குதிரைவாகனக் காட்சி. |
| 29 | 12—5—79 | சனி | 5 | சகோபுர ரிஷபவாகனக் காட்சி, |

சித்திரை - மே

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 30 | 13—5—79 | ஞாயிறு | 6 | யானை, அன்னம், ஆட்டுக்கிடா வாகனக் காட்சி. |
| சித்தார்த்தி - ஞீ | 31 | 14—5—79 | திங்கள் | 7 | இரவு மணி 6-30 க்குமேல் 8-30 க்குள் விருச்சிக லக்னத்தில் திருக்கல்யாண வைபவம். புஷ்ப விமானம். வெள்ளிரதக் காட்சி. |
| | 1 | 15—5—79 | செவ்வாய் | 8 | குதிரை, கிளி, யானை வாகனக் காட்சி. |
| | 2 | 16—5—79 | புதன் | 9 | காலை மணி 9-க்குமேல் 10-க்குள் மிதுன லக்னத்தில் மஹாரதாரோகணம். **திருத்தேர் வடம் பிடித்தல்.** |
| வைகாசி - ஞீ | 3 | 17—5—79 | வியாழன் | 10 | காலை ஸ்ரீ சபாநாயகர் தீர்த்தம் கொடுத்தருளுளல். பிறகு பஞ்சமூர்த்திகளும் ரிஷபாரூடராய் எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளல். இரவு துவஜாவரோகணம். |
| | 4 | 18—5—79 | வெள்ளி | | மௌன உற்சவம். |
| | 5 | 19—5—79 | சனி | | ஸ்ரீ சண்டேசுவரர் உற்சவம். |
| | 6 | 20—5—79 | ஞாயிறு | | காலை உற்சவப் பிராயச்சித்தாபிஷேகம். இரவு மணி 8-30 க்குமேல் 9-க்குள் பஞ்சமூர்த்திகள் யதாஸ்தானம். |

# சமயப் பயிற்சி

**8 — 5 — 79 செவ்வாய்க்கிழமை காலை**

தருமை ஆதீனம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த

**தொடக்க உரை :** முத்தமிழ்க்காவலர்

| நாள் கிழமை | காலை மணி 10-30 முதல் 11-30 வரை | காலை மணி 11-முதல் 12-30 வரை |
|---|---|---|
| 8—5—79 செவ்வாய் | "உண்மை விளக்கம்" தருமையாதீனப்புலவர் **திரு. சி. அருணைவடிவேல் முதலியார்** | "சிவஞான சித்தியார்" தருமையாதீனப் புலவர் **திரு க. வச்சிரவேல் முதலியார்** |
| 9—5—79 புதன் | ,, | ,, |
| 10—5—79 வியாழன் | ,, | ,, |
| 11—5—79 வெள்ளி | ,, | ,, |
| 12—5—79 சனி | ,, | ,, |
| 13—5—79 ஞாயிறு | "திருவருட்பயன்" | ,, |
| 14—5—79 திங்கள் | ,, | ,, |
| 15—5—79 செவ்வாய் | ,, | ,, |
| 16—5—79 புதன் | ,, | ,, |

## வகுப்பு

**பயிற்சி வகுப்புத் தொடக்க விழா**

குருமகா சந்நிதானம்

**பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை.**

**திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்** திருச்சிராப்பள்ளி.

| பிற்பகல் மணி 2-30 முதல் 3-30 வரை | பிற்பகல் மணி 3-30 முதல் 4-30 வரை |
|---|---|
| " ஆகமம் " சிவஸ்ரீ சுவாமிநாத சிவாசாரியார் | " திருமுறைகள் " திரு. சொ. சிங்காரவேலனார் |
| " | " காப்பியங்கள் " திருமதி. ப. நீலா |
| " இதிகாசங்கள் " திரு. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் | " பண்டாரசாத்திரங்கள் " திரு. வி. சா. குருசாமி தேசிகர் |
| " | " நீதி நூல்கள் " திரு. அ. கலியபெருமாள் |
| " பதினெண்புராணங்கள் " ஸ்ரீ டி. கே. முத்துசாமி சாஸ்திரிகள் | " வேதம் " அக்னிகோத்திரம், பிர்மஸ்ரீ இராமாநுஜ தாதாசாரியார் |
| " உபநிடதங்கள் " ஆடூர் காசி. சிவஸ்ரீ வைத்தியநாத சிவாசாரியார் | " |
| உபநிடதங்கள் " | " இதிகாசங்களில் சைவம் " திரு. பி. இராமதாச ஐயர் |
| பத்ததிகள் " | " திருக்கோயில் வழிபாடு " திரு. வி. சபேசனார் |
| சிவபூசா விதிகள் " | " தருமை ஆதீனக் குருபரம்பரை " ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் |

உ

குருபாதம்

# திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

## முதல் திருநாள்

8—5—79 செவ்வாய்க்கிழமை ] [ மாலை 6-30 மணி

## சமயாசாரியர் திருநாள்

## கருத்தரங்கம்

வரவேற்புரை :

**வித்துவான் ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**
வேளூர் தேவஸ்தானம். கட்டளை விசாரணை.

வாழ்த்துரை :

திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி மகாசந்நிதானம்,
**ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள்**
( தவத்திரு குன்றக்குடி அடிகளார் )

தொடக்கவுரை :

**மாண்புமிகு. திரு. செ. அரங்கநாயகம், எம். ஏ., பி. டி.,**
தமிழ்நாடு அரசு கல்வி அமைச்சர்

சிறப்புரை :

முத்தமிழ்க்காவலர்,
**திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்,**
திருச்சிராப்பள்ளி.

விரிவுரைகள் :

பண்ணாராய்ச்சி வித்தகர்,
**திரு. ப சுந்தரேசனர்,**
குடந்தை.

— நால்வர் வாக்கில் முத்தமிழ்

செஞ்சொற்கொண்டல்,
**டாக்டர். திரு. சொ. சிங்காரவேலனர், எம். ஏ., பி. எச்டி.,**
மாயூரம்.

— நால்வர் வாக்கில் சைவ சித்தாந்தம்

௧௧

# இரண்டாம் திருநாள்

9—5—79 புதன்கிழமை] [மாலை 6-30 மணி

## சேக்கிழார் திருநாள்

## பட்டிமண்டபம்

வரவேற்புரை :

**வித்துவான் ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்**
திருநள்ளாறு தேவஸ்தானம், கட்டளை விசாரணை.

நடுவர் :

டாக்டர். ஒளவை. நடராசன் எம். ஏ., பி. எச்டி.,
சென்னை.

பொருள் :

தமிழக வரலாற்றில் சேக்கிழார் வடித்த பெரியபுராணம்
மரபுவழிக்காப்பியமா ? திருப்புமுனைக்காப்பியமா ?

| மரபுவழிக்காப்பியமே ! | திருப்புமுனைக்காப்பியமே ! |
|---|---|
| புலவர்<br>**திருமதி. இரா. காந்திமதி**<br>மதுரை | அருள்நெறி நாவலர்<br>**திரு. அ. வ. இராஜகோபாலன்** எம்.ஏ.,<br>புத்தனும்பட்டி |
| புலவர்<br>**திரு. மா. கிருஷ்ணமூர்த்தி**<br>சேலம் | வித்துவான்<br>**திருமதி. ப. நீலா** எம். ஏ.,<br>தருமபுரம் |
| வித்துவான்<br>**திரு. ஆ. இராமபத்திரன்** எம்.ஏ.,<br>மாயூரம் | பேராசிரியர்<br>**திரு. த. அகரமுதல்வன்** எம்.ஏ.,<br>பூம்புகார் |

## மூன்றும் திருநாள்

10—5—79 வியாழக்கிழமை] [மாலை 6 30 மணி

### பரஞ்சோதி முனிவர் திருநாள்

## வழக்காடுமன்றம்

வரவேற்புரை :

**வித்துவான் ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**
தருமை ஆதீன சமயப்பிரசார நிலையம் சென்னை.

நடுவர் :

பேராசிரியர்
**திரு. தி. வ. காந்திமதிநாதன்** பி. ஏ., ஆனர்சு.
மாயூரம்

பொருள் :

**அரசின் நிதியால் ஆலயம் அமைத்த மாணிக்கவாசகர் செயல் சமூக நோக்கில் குற்றமே!**

| வழக்குத்தொடுப்பவர் : | எதிர்வழக்காடுபவர் : |
| --- | --- |
| புலவர் | புலவர் |
| **திருமதி. கோ. பா. தாமரை** எம்.ஏ., | **திருமதி. இராஜம்மரகதம்** எம்.ஏ., |
| மதுரை | மதுரை |

## நான்காம் திருநாள்

11—5—79 வெள்ளிக்கிழமை] [மாலை 6-30 மணி

### சங்கப்புலவர் திருநாள்

## கவியரங்கம்

வரவேற்புரை ;

**ஸ்ரீமத். பொன்னம்பலத் தம்பிரான் சுவாமிகள்**
சீகாழி தேவஸ்தானம், கட்டளை விசாரணை.

தொடக்கவுரை :

**மாண்புமிகு. திரு. கே. காளிமுத்து** எம். ஏ.,

தமிழ்நாடு அரசு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

தலைமைக்கவிதை :

செந்தமிழ்ச்செல்வர்,

**திரு. கி. வா. ஜகந்நாதன்** எம். ஏ., சென்னை.

பொருள் :— **சங்கப் புலவர்களுடன் ஒருசந்திப்பு ......**

பங்கேற்போர் :

**கவிஞர். திரு. அ. கலியபெருமாள்** எம். ஏ., மாயூரம்.

**— எழுத்துச் சீர்திருத்தம்பற்றித் தொல்காப்பியருடன்.**

**கவிஞர். திரு. அரு. நாகப்பன்** சென்னை.

**— இளையதலைமுறையினர்பற்றி இளங்கோவுடன்.**

**கவிஞர், திரு. ம. வே. பசுபதி** திருப்பனந்தாள்.

**— காதல் பற்றிக் கபிலருடன்.**

**கவிஞர். திரு.** ச. **சவகர்லால்,** எம். ஏ., பி. டி., திருப்புத்தூர்.

**— முதியோர்கல்விபற்றி ஔவையாருடன்.**

**கவிஞர். திரு.** பெ. வேலு எம். ஏ., தாரமங்கலம்.

**— வறுமைபற்றிப் பெருந்தலைச்சாத்தனாரிடம்.**

## ஐந்தாம் திருநாள்

12—5—79 சனிக்கிழமை] [மாலை 6-30 மணி

### கச்சியப்பர் திருநாள்

## கருத்தரங்கம்

வரவேற்புரை :

**ஸ்ரீமத். சுந்தரலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**

திருவையாறுதேவஸ்தானம், கட்டளை விசாரணை.

தொடக்கவுரை :

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி
**மாண்புமிகு, திரு. செங்கோட்டுவேலன்**
சென்னை.

விரிவுரைகள் :

மகாமகோபாத்தியாய - அக்னிகோத்திரம்
**பிர்மஸ்ரீ. இராமானுஜ தாதாசாரியார்**
கும்பகோணம்.

**— கந்தபுராணத் தத்துவம்.**

திருக்குறளார்
**திரு. வீ. முனிசாமி** பி. ஏ., பி. எல்.,
விழுப்புரம்.

**— கந்தபுராணத்தில் ஆணவத்தின் வீழ்ச்சி.**

தருமையாதீனப் புலவர்
**திரு. ந. ரா. முருகவேள்** எம். ஏ., எம். ஓ. எல்.,
சென்னை.

— கந்தபுராணத்தில் அருளிப்பாட்டின்பெருமை

## ஆறும் திருநாள்

13—5—79 ஞாயிற்றுக்கிழமை ] [ மாலை 6-30 மணி

## கம்பர் திருநாள்

# பட்டிமண்டபம்

வரவேற்புரை :

ஸ்ரீமத். கந்தசாமித் தம்பிரான் சுவாமிகள்
குறுக்கை தேவஸ்தானம், கட்டளை விசாரணை.

சிறப்புரை :

மகாமகோபாத்தியாய - அக்னிகோத்திரம்
**பிர்மஸ்ரீ. இராமானுஜ தாதாசாரியார்**
கும்பகோணம்.

நடுவர் :

செந்தமிழ்ப் புரவலர்
திரு. இரா. இராஜசேகரன் பி. எஸ்சி., பி. எல்.,
மேலையூர்.

பொருள் :

கம்பன் காவியத்தில் வாலிவதம்
அவதார நோக்கமா ? அழியாப் பெரும்பழியா ?

அவதார நோக்கமே !

பேராசிரியர்
திரு. ஆ. செகந்நாதன் எம். ஏ,
பூம்புகார்.

வித்துவான்
திருமதி. துரை வள்ளி எம். ஏ.,
மாயூரம்.

வித்துவான்
திரு. கா. ம. கண்ணப்பன்
தருமபுரம்.

அழியாப் பெரும்பழியே !

மனம்
திரு. சேர. சந்திரகாசன்
சேலம். [எம்.ஏ., பி.எட்.,

புலவர்
திருமதி. இராஜம்மாள் சங்கரன்
பழநி. [எம். ஏ.,

வித்துவான்
திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ.,
தருமபுரம்.

## ஏழாம் திருநாள்

14—5—79 திங்கட்கிழமை] [மாலை 6 - 30 மணி

## ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி

## திருக்கல்யாணத் திருநாள்

வரவேற்புரை :

தருமை ஆதீனப் புலவர்
சிரோமணி. வித்துவான். திரு. வி. சபேசன்
தருமபுரம்.

தொடக்கவுரை :

தமிழ்நாடு அட்மினிஸ்டிரேட்டர் ஜெனரல் அன்ட்
அபீஷியல் டிரஸ்டி

**திரு. டி. என். சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,**

சென்னை.

சிறப்புரை :

ஆனந்ததாண்டவபுரம்.

**பிரம்மஸ்ரீ. பி. இராமதாசஐயர்**

**— மீனாட்சியம்மை திருமணம்.**

இரவு 9 - 00 மணி

## பொம்மை நாடகம்

ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடக சபையினர் மாயூரம்.

**"வள்ளியம்மை திருமணம்"**

## எட்டாம் திருநாள்

15—5—79 செவ்வாய்க்கிழமை ] [ மாலை 6 - 30 மணி

## திருவள்ளுவர் திருநாள்

## சிந்தனை அரங்கம்

வரவேற்புரை :

தருமையாதீனப் புலவர்

**வித்துவான். திரு, வி. சா. குருசாமிதேசிகர் எம். ஏ.,**

தருமபுரம்.

தொடக்கவுரை :

தமிழ்நாடு அரசு வருவாய்த்துறை அமைச்சர்.

**மாண்புமிகு. திரு. எஸ். டி. சோமசுந்தரம் பி. இ.,**

சிறப்புரை :

சிலம்புச்செல்வர்

மாண்புமிகு. திரு. ம. பொ. சிவஞானம்,

தமிழ்நாடு சட்ட மேலவைத் தலைவர்.

— வள்ளுவம் குறிக்கோளா? நடைமுறையா?

விரிவுரை :

தமிழ்க்கடல்மணி

பேராசிரியர். திரு. இரா. இராதாகிருஷ்ணன் எம். ஏ.,

திருச்சிராப்பள்ளி.

— வள்ளுவரின் கடவுட் கோட்பாடு.

## ஒன்பதாம் திருநாள்

16—5—79 புதன்கிழமை] [மாலை 6 - 30 மணி

## வில்லிபுத்தூரார் திருநாள்

## வழக்காடு மன்றம்

வரவேற்புரை :

வித்துவான். திருமதி. ப நீலா எம். ஏ.,

தருமபுரம்.

நடுவர் :

பெரும்புலவர். பேராசிரியர்

திரு. பா. நமசிவாயம் எம். ஏ.,

திருப்புத்தூர்.

பொருள் :

"காப்பியநோக்கில் கர்ணன் குற்றவாளியே"

| வழக்குத்தொடுப்பவர் : | எதிர்வழக்காடுபவர் : |
|---|---|
| புலவர் | புலவர் |
| திரு. கோ. சாரங்கபாணி | திரு. இரா செல்வக்கணபதி எம். ஏ., |
| காரைக்கால் | தருமபுரம் |

# பத்தாம் திருநாள்

17—5—79 வியாழக்கிழமை ] [ காலை 8 - 00 மணி

## குருபூஜைத் திருநாள்

வரவேற்புரை :

புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ.,
தருமபுரம்.

சிறப்புரை :

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம்
ஸ்ரீமத். காசிவாசி மூத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்

விரிவுரைகள் :

தருமையாதீனப் புலவர்
பண்டிதவித்துவான். திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ.,
திருப்பனந்தாள்.
— சிவபூஜை.

வித்துவான். திரு. மு. ஆறுமுக தேசிகர்
தருமபுரம்.
— குருபூஜை.

வித்துவான். திரு. மு. சுந்தரராஜன் பி. ஏ.,
திருவாரூர்.
— மாகேஸ்வரபூஜை

காலை 8 - 30 அளவில்

## ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் வழிபாடு

குருபூஜை விழா மலர்
" சைவசித்தாந்தம் "

மலர் வெளியீடு :

திரு. கருமுத்து எஸ். சொக்கலிங்கம் செட்டியார்
சிவகாமி மில் அதிபர், மதுரை.

# குருபூஜைத் திருநாள்

17—5—79 வியாழக்கிழமை] காலை 11-00 மணி

## ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் வழிபாடு

( ஆதீனஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருக்கோயில் )

மாலை 4-30 மணி

வரவேற்புரை :

**வித்துவான் திரு. மு. சிவச்சந்திரன்** எம். ஏ.,
தருமபுரம்.

தொடக்கவுரை :

**திரு, ஆர், தண்டபாணி** பி. எஸ்சி., பி. எல்.,
துணை ஆணையர்
இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, நாகப்பட்டினம் .

சிறப்புரை :

**டாக்டர். திரு. சி. பாலசுப்பிரமணியன்** எம். ஏ., பி. எச்டி.,
சென்னை.

விரிவுரைகள் :

**திரு. இராம. ஏகப்பன்**
கோயமுத்தூர்.

**— சொக்கநாதக் கலித்துறை.**

பேராசிரியர்
**திரு. சொ. அரியநாயகம்** எம். ஏ.,
கோயமுத்தூர்.

**— சிவபோகசாரம்**

**புலவர். திரு. எம். பாலசுப்பிரமணியம்**
கோயமுத்தூர்.

**— சொக்கநாதவெண்பா**

மாலை 6-00 மணி அளவில்

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**

காவிரித் திருமஞ்சனத்திற்கும், குருமூர்த்த வழிபாட்டிற்கும் எழுந்தருளுதல்.

18—5—79 வெள்ளிக்கிழமை ] [ காலை 8 - 00 மணி

## பட்டணப்பிரவேசத் திருநாள்

வரவேற்புரை :

வித்துவான். திரு. கா. ம. கண்ணப்பன்

சிறப்புரை :

பல்கலை வித்தகர்

திரு. மீ. ப. சோமு

சென்னை.

விரிவுரைகள் :

புலவர்மணி

வித்துவான் திரு. மு. இரத்தின தேசிகர்

திருவாரூர்

— திருநீறு.

வித்துவான். திரு. தா. குருசாமி

மதுரை.

— உருத்திராக்கம்.

திரு. கே. எம். வேங்கடராமையா எம். ஏ.,

அண்ணாமலைநகர்.

— ஐந்தெழுத்து.

தருமையாதினப் புலவர்

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

— வேடமே மெய்ப்பொருள்.

தருமையாதினப் புலவர்

சிரோமணி வித்துவான் திரு. வி. சபேசன்

— ஞானப்பிரகாசமாலை

காலை 10-00 மணி அளவில்

## ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் வழிபாடு

நண்பகல் 1-00 மணி

## மாகேசுவரபூஜை

18—5—79 வெள்ளிக்கிழமை] [மாலை 6-00 மணி

## சமயப்பயிற்சி வகுப்பு நிறைவு விழா

**பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்குதல்**

வரவேற்புரை :

**வித்துவான் ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**
வேளூர் தேவஸ்தானம், கட்டளை விசாரணை.

தொடக்கவுரை :

அறப்பணிச் செல்வர்
**டாக்டர் திரு கே. அரங்கசாமி பிள்ளை** எம். பி., பி. எஸ்.,
சிதம்பரம்.

சிறப்புரை ;

இலக்கிய ரசிகமணி
**திரு. எஸ். மகராஜன்** பி. எஸ்சி., பி. எல்.,
சென்னை.

இரவு 7-00 மணி

## இன்னிசை

இசைமணி, தருமையாதீன இசைப்புலவர்
**சீகாழி. திரு. எஸ். கோவிந்தராஜன் குழுவினர்**

இரவு 10-00 மணி முதல்

**தருமையாதீனம் 26 வது குருமகாசந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

## பட்டணப்பிரவேசம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

## சிவபெருமான்

சீர்கொண்ட ஆனந்த மாகி எங்கும்
செறிவாகிப் பரமாகித் திரம தாகி
ஏர்கொண்ட கருணைதிரு வுருவ மாகி
எழில்கொண்ட மலைமகளை இடத்திற் கொண்டோன்
கார்கொண்ட நிறங்கொண்ட முகுந்த னுதிக்
கடவுளர்வந் தடிபரவும் கடவுள் கொன்றைத்
தார்கொண்ட முடியனவன் அடியைத் தாழ்ந்து
தாழாத பெருங்கதியில் வாழா நிற்பாம்.

### தருமையாதீனக் குருமுதல்வர்

## ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்தி டாமல்
தாரணி அன்பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்க ணாளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

— சம்பந்த சரணாலயர்.

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 38 | சித்தார்த்தி - சித்திரை - 10—5—79 | இதழ் 6

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியிஞய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## தருமைக்கு வாருங்கள்

### சமயங்களின் கடமை:

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்ருர் ஔவையார். மக்களில் பலரும் இதன் அருமையை உணர்வதில்லை. பசிதீர உண்பதுவும், உறங்குவதுமே வாழ்க்கை எனக்கருதி வாழ்நாளெல்லாம் பொருள் தேடுவதையே குறிக்கோளாகக்கொண்டு சுழல்கின்றனர். குளிக்கச்சென்றவன் சேறு பூசிக்கொண்டுவந்தால் உலகம் நகைக்கிறது. மலம்நீங்கி வீடுபேற்றுக்குக்கிடைத்த மனிதப்பிறப்பை, பணம் சேர்த்து, பாழ்நரகில்வீழப் பயன்கொள்ளும் அறியாமையை மாந்தர் உணர்வதில்லை. ஏன்? எதற்கு? எங்கே? என்று தெரியாது ஓடும் மனித இனத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்தி, வாழ்வின், அர்த்தத்தைப் புரியவைக்க முயல்வனவே நமது சமயங்கள். இறை உயிர், தளை என்று அறிவு பூர்வமாகப் பாகுபடுத்தி, சிந்தனை

உணர்வோடு நெறிப்படுத்தும் காரணத்தால் சமயங்கள் பலவற்றுள்ளும் சைவம் தலைமை பெறுகிறது.

## இருவகை அணுகுமுறை :

சமயம் மக்கள்வாழ்வின் உயிர். உயிரோடு வாழ்பவன் உயிரின் பெருமையை உணர்வதில்லை. உணராத மக்களை உணரவைக்கத் தோன்றியன நமதுசமய நிறுவனங்கள். திருக்கோயில்களும், திருமடங்களும் மக்களை நெறிப்படுத்தும் பணியில் சமூகத்தின் இருகண்களாக விளங்குவன. சமயச் சான்றோர்கள் மக்களை நெறிப்படுத்த இருவழிகளை மேற்கொண்டனர். தாமே சென்று மக்களைச் சந்தித்து அறிவுரை கூறித் தெளிவிப்பது ஒருமுறை. தாம் ஓர் இடத்தில் பெருமைதோன்ற வீற்றிருந்து, தம்மை நாடிவரும் மக்களுக்கு ஞானம் வழங்குவது மற்றொருமுறை. தென்னாட்டுச் சமயநிறுவனங்களுள் முன்னணியில் நிற்கும் நமது தருமையாதீனம் தொடக்கத்தில், தம்மை நாடிவரும் நல்லன்பர்களுக்கு அறிவுவிளக்கம் செய்யும் நோக்கிலேயே திகழ்ந்திருந்தது.

## தாயன்பில் தருமையாதீனம் :

காலத்தின் போக்கில் நிகழும் மாற்றங்கள் பல, தவிர்க்க இயலாதன. கல்வியின் அருமை உணராதவன் பள்ளியை நாடுவதில்லை. நல்ல ஆசிரியன் மாணவன் வீடுதேடிச் சென்று அவனை அறிஞனாக்க முயல்வது சமூகத்தின் நலங்கருதிய சூழ்நோக்குடையது. சமய நிலையங்களையும், அங்கே தங்கியிருந்து தன்னலமற்ற தூய துறவால் பெருஞானம்பெற்று மெய்யுணர்ந்த சமயப் பெரியார்களையும் நாடிச்சென்று நல்லறிவுபெறும் விழைவும் நேரமுமில்லாதமக்களுக்கு அறிவு கொளுத்த வேண்டிய கடமையும் பொறுப்பும் சமயச்சான்றோர்களுக்கு ஏற்பட்டது. தாமே விரும்பி உணவு கொள்ளவாராது விளையாட்டில் நாட்டம் கொண்டிருக்கும் குழந்தையை, அதுவிளையாடும் இடத்தில் சென்று உணவூட்டிக் காக்கும் தாயினைப் போல இன்று தருமையாதீனம் மக்களின் வாழ்விடமெல்லாம் சென்று தன் பணிகளின் வழியே மக்களை நெறிப்படுத்தி வருகிறது.

## நிறைவுடைய பெரும்பணிகள் :

நானூற்று ஐம்பது ஆண்டுக்கால வரலாற்றுச் சிறப்பு தருமை ஆதீனத்திற்கு உண்டு. 'ஓடிவரும் காரணர்க்கு உண்மை வைக்க' வென எழுந்த திருமடம் பல்வேறு நிலையில் மொழி, கலை, சமயம், பண்பாடு போன்றவற்றின் வளர்ச்சிக்காக ஆற்றிவந்திருக்கும் பெரும் பணிகள் நிறைவுடையன. காலத்தின் நெருக்கடிகளை எல்லாம்

போராட்ட உணர்வுடன் கடந்து ஒல்லும்வகையான் நல்லறப்பணிகள் பலவற்றையும் மக்களின் ஒத்துழைப்போடும் உதவியோடும் சலியாது இயற்றி வந்திருக்கும் தருமையாதீனத்தின் தொண்டுகளை அன்பர்கள் அறிவர். இன்றும் மக்களின் விழைவறிந்து நாடிச்சென்று ஞானம் விளைப்பதும், தேடிவந்தோர்க்குத் தெளிவுறுத்துவதும் தருமையாதீனத்தின் தலையாய நோக்கமாக இருந்துவருகிறது.

**நன்றிப்பெருவிழா :**

எந்த ஒரு நிறுவனத்தின் வளர்ச்சியும், அதனைத்தோற்றுவிப்பவரின் தூய்மையையும், உயர்நோக்கினையும் சார்ந்தே அமையும். 'தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்' என்றார் வள்ளுவர். புகழ்பூத்த தருமையாதீனத்தின் சிறப்பெல்லாம், இவ்வாதீனத்தைத்தோற்றுவித்த அருளாளர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்ததேசிக பரமாசாரிய சுவாமிகளையே சாரும். கோடையில் ஆலமர நிழலில் இளைப்பாறும் ஒருவன், அம்மரத்தை நட்டுவளர்த்தவனை அன்போடு நினைவு கூர்தல் பண்பாடு. நானூற்றைம்பது ஆண்டுக்காலம் தமிழ்ச் சமுதாயம் பெற்ற பல்வேறு சிறப்புக்களை எல்லாம் நன்றியோடு நினைவு கூர்ந்தால் நம் அகமும் புறமும் இதனைத் தோற்றுவித்த அருளாளரின் தாள்மலர்களிலேயே குவியும்.

**வாருங்கள் தருமைக்கு :**

ஆண்டுக்கு ஒருமுறை அந்தச் சான்றோரை - தன்னலமற்ற தமிழ்விளக்கை - ஞானப்பெட்டகத்தை நினைவுகூர்வது தமிழர் கடன். நம் நன்றியுணர்ச்சிக்கு அது புகழ் கூட்டும். அதுகூட அவர்களைச் சிறப்பிக்க அன்று ; நம்மைநாமே பண்படுத்திக்கொள்ளத் தருமை ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்தரின் குருபூஜைப் பெருவிழா மே 8 முதல் 18 முடிய பதினொருநாட்கள் சிறப்பாக இவ்வாண்டும் கொண்டாடப்பட இருக்கிறது. வழக்கம்போல் திருநெறிய தெய்வத் தமிழ்மாநாடும், சமயப் பயிற்சி வகுப்பும் நடைபெற ஏற்பாடாகி யிருக்கிறது. தமிழகத்து நல்லறிஞர்கள் எல்லாம் தருமையில் திரள்கின்றனர். குருபூஜைத் திருநாள் மே 17 வியாழக்கிழமை வருகிறது. தேர்ந்த தமிழ் நெஞ்சும் சிவம்பெருக்கும் சீலமும் மிக்க தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்களின் பட்டணப் பிரவேசக் காட்சி மே 18 இல் அமைகிறது. தமிழ்வேட்கையும் அருள்தாகமும் உடைய அன்பரெல்லாம் தருமைக்கு வாருங்கள் ; திருவருளும் குருவருளும் நெஞ்சில் தேக்கிச் செல்லுங்கள்.

**குருவருள் பெருகுக !**

# "எடுத்துச் சுமப்பான்"

'சித்தாந்தப் புலவர் மணி'

## திரு. ந. ரா. முருகவேள் M, A., M. O. L.

கடவுள் தனக்கென ஒருபெயரும் இல்லாதவர். ஆயினும் அன்பர்கள் அவருக்குப் பல பெயர்களை வைத்து வழங்குகின்றார்கள். 'பேராயிரம் உடைய பெருமான்' என்று பெரியோர்கள் இறைவனைப் புகழுகின்றார்கள். இறைவனுக்குப் பலப்பல பெயர்கள், தொன்று தொட்டே நூல்களில் வழங்கப்பட்டுள்ளன. எனினும், சிலசமயங் களில் அடியார்களும் பக்தர்களும், தாங்களாகவே பல பெயர்களை இறைவனுக்குப் பலவகைகளில் புதியனவாகப் படைத்து வழங்குவது. உண்டு. சுந்தரமூர்த்திசுவாமிகள் 'பித்தன்' என்று வைது, சிவபெரு மானுக்கு ஒரு புதிய பெயரை, வசவேயாயினும் அவரே விரும்பி மகிழும்படி வழங்கியிருத்தலை நாம் நன்கறிவோம்.

இவ்வாறே, பல புலவர்களும் தாமாகவே அன்பினால் கடவுளுக்குப் பல பெயர்களை 'ஆக்கப்பெயர்' களாகப் படைத்து வழங்கியிருத்தலைக் காண்கின்றோம். அத்தகைய ஆக்கப்பெயர்களுள் "**எடுத்துச் சுமப் பான்**" என்பதும் ஒன்று. இப்பெயர் இந்நாளில் நாம் Porter என வழங்கும் சுமைதூக்கிகளைக் குறிப்பிடுவதற்கு ஏற்ற ஒன்றாகும். ஏனெனில், அவர்கள்தாம் நமக்காக நமது மூட்டை முடிச்சுகளை எடுத்துச் சுமந்துகொண்டுவர இசைந்து, அதற்காகவே இருக்கின் றார்கள். இத்தகைய கூலியாட்களையே குறிக்கத்தக்க "எடுத்துச் சுமப்பான்" என்னும் சொற்றொடரினை, இறைவனுக்கே உரியதாக வழங்கியிருக்கின்றார், ஒரு பெருஞ்சான்றோர்.

சைவசமய சந்தானகுரவர்களுள் ஒருவரும், சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கில் எட்டு நூல்களை இயற்றியிருப்பவரும் ஆகிய உமாபதி சிவாசாரியார், தாம் இயற்றிய திருவருட்பயன் என் னும்நூலின்கண் இப்பெயரை இறைவனுக்கேயுரியபெயராகப்படைத்து வழங்கியிருக்கின்றார்.

"கிடைக்கத் தகுமேநற் கேண்மையர்க் கல்லால்
எடுத்துச் சுமப்பானை இன்று"

யார் இறைவனை அடைக்கலம் புகுந்து, தம்மை இறைவன்பால் ஒப்படைத்துவிட்டு, ''நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே'' எனப் பற்றற்று, அவனையே பற்றுக்கோடாகப் பற்றி நிற்கின்றார்களோ, அவர்களுடைய அன்புச்சுமை — வினைச் சுமைகளையெல்லாம், தானே ஏற்றுக்கொண்டு, இறைவன் அவர்களைக் காத்தருள்கின்றான். கூலியின்பொருட்டு நம் சுமைகளையெல்லாம் தாம் எடுத்துக்கொள்ள இசைந்து, போட்டியிட்டுக்கொண்டு ஓடி வரும் ஏவலாட்களைப்போல, அன்பின்பொருட்டு அடியார்களின் சுமைகளையெல்லாம் தான் எடுத்துச் சுமந்துகொண்டு, அவர்களின் புறம்புறமே திரிந்து பின்வருவதற்கு விரும்பி, இறைவன் சித்தமாகக் காத்துக்கொண்டு இருக்கின்றானும்.

வீரமும் பூண்பர், விசயனொ டாயதோர்
தாரமும் பூண்பர், தமக்குஅன்பு பட்டவர்
பாரமும் பூண்பர், நற் பைங்கண் மிளிர்அரவு
ஆரமும் பூண்பர், அரநெறி யாரே!

— திருநாவுக்கரசர்.

முன்பு ஒருகால் சிவபெருமான் மதுரையில், திருநீலகண்ட யாழ்ப்பாணர்பொருட்டு விறகு சுமந்துகொண்டு. விறகு தலையனாக வந்தனன் அல்லனோ? திருநாவுக்கரசர் பொருட்டுக் கட்டுச்சோறு சுமந்துகொண்டு, திருப்பைஞ்ஞீலியில் வந்து காத்திருந்தனன் அன்றோ? 'வந்தி' என்னும் செம்மனச் செல்வியின்பொருட்டு, வைகையாற்றங்கரையினை அடைக்கக் கூலியாளாகப்போந்து, மண் சுமந்து, பாண்டியனின் பிரம்பால் அடிபட்டுப் புண்ணும் சுமந்த பொன்மேனியன் அல்லனோ, நம் பெருமான்? எனவே, அவனுக்கு 'எடுத்துச் சுமப்பான்' என்று பெயர்கொடுப்பது எத்துணைப் பொருத்தம்.

இவ்வாறு இறைவன் 'எடுத்துச்சுமப்பான்' என இருக்கவும், நாம் நம் சுமைகளை அவன்பாற் கொடுத்து இறக்கிவிட்டுச் சுகப்பட்டு உய்யும் உபாயம் தெரியாமல், தாங்கமுடியாத வீண் சுமைகள் பல வற்றை நம் தலைமேல் வாரிப்போட்டுக் கொண்டு, தத்தளித்துத் தடுமாறி வருந்துகின்றோமே என்று இரங்கி, நம்பொருட்டுப் பரிவு கொள்கின்றார் உமாபதி சிவாசாரியார்.

''கிடைக்கத் தகுமே நற் கேண்மையர்க்கு அல்லால் எடுத்துச் சுமப்பானை இன்று'' என்னும் மேலைத் திருவருட்பயன் செய்யுளை, ஆசிரியர் சிவஞானசுவாமிகள் அதன் அருமைப்பாடு அறிந்துவியந்து, தமது சிவஞானபோதப் பேருரையில்,

"செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே"

என்னும் சிவஞானபோதப் பன்னிரண்டாம் சூத்திரத்துள் வரும், "**நோன்றாள்**" என்னும் சொல்லுக்கு விளக்கவுரை எழுதும் இடத்தில், "நோன்றாள் - வினைத்தொகை. நோன்றல் - பொறுத்தல் (சுமத்தல், தாங்குதல்). 'எடுத்துச்சுமப்பானை' என்றார் புடைநூல் ஆசிரியரும்" என எடுத்துக்காட்டி அருள்கின்றார். திருமுருகாற்றுப் படையில், முருகப்பெருமானின் திருவடிகளை "**உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்தாள்**" எனச்சிறப்பித்து, நக்கீரர்பெருமான் ஓதியிருத்தலை ஓர்ந்துணர்ந்து தழுவிப் போற்றிக்கொண்டே, 'நோன்றாள்' என்னும் இந்நுண்பொருள் தொடரை, ஆசிரியர் மெய்கண்டார் அருளிச்செய்வாராயினர் என்பது, இங்குநாம் அறிந்து மகிழ்தற் குரியது.

"**எடுத்துச் சுமப்பான்**" எனச்சிவன் தான் நின்றும்,
தொடுத்துழல்நம் துன்பச் சுமைகள் – விடுத்துஅவன் தாள்
மேவிமிகப் பற்றிஅன் பின் உய்யாமல், வீணே நாம்
பாவிகளாய் வாழ்கோம் பரிந்து.

---

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil

I feel happy to have had the privelege of worshipping in this ancient and sacred temple with my wife. In spite the difficulties created by the land legislations the authorities seem to be striving hard and maintaining the cerenity and sacredness of the temple. I am happy that the administration is doing their best.

(S-d) V. Ramaswami

10—3—79 Judge, High Court, Madras.

# உயிர்

தருமையாதீனத் தமிப்புலவர்

திரு கு. சுந்தரமூர்த்தி எம். ஏ.,

உலகில் உள்ள பொருள்களை இருவகைப்படுத்தலாம். ஒன்று காட்சிப்பொருள். பிறிதொன்று கருத்துப்பொருள். காட்சிப்பொருள் என்பது கண்ணால் காணக்கூடியதாகும். நிற்பனவும் நடப்பனவுமாய பொருள்களும், அவற்றால் காண்டற்கு உரியனவாக இயற்றப்படும் பொருள்களும் இவ்வகையில் அடங்கும். கருத்துப்பொருள் என்பது மனத்தால்கருதி உணரப்படுவதாகும். அறிவு, கற்பு, சாயல், மடன் முதலியனவாகக் கூறப்படுவன இவ்வகையில் அடங்கும். தொல்காப்பியத்துள் 'காட்டலாகாப் பொருள' எனக் குறிப்பன இவ்வகையன வாகும்.

**உயிர் :-**

முற்கூறியபொருள்களில் உயிர் மனத்தால்கருதி உணரப்படுவது; கண்ணால் காண்டற்கு இயலாதது. உயிர் எத்தன்மைத்து என்றவழி உணர்தல் தன்மைத்து என இலக்கணம் வல்லார் கூறும் கூற்றாலும் இதனியல்பு விளங்கும். இதனால்தான் உயிர் உள்பொருளா ? அன்றி இல்பொருளா ? என்ற அளவிற்குக் கருத்து வேற்றுமை எழுவதாயிற்று எனினும், இதன் ஆற்றல் மிகப்பெரியதும் அரியதும் ஆகும். உடல் இயங்கவும் தொழிற்படவும் காரணமாக இருப்பது இதுவேயாகும். இவ்வுயிரும், உடலுறுப்புகளுள் ஒன்றாய கண்ணும் அறிஞர்களால் சிறப்பித்துக் கூறப்படுவனவாகும்.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

"ஒற்றும் உரைசான்ற நூலும் இவ்விரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்"

"கண்ணே வேண்டினும் ஈயக்கடவேன் என்
உண்ணேராவி வேண்டினும் இன்றே உடைதன்றே"

என வருவன காண்க.

**மொழியியல் வல்லார் :-**

உயிர் உடம்புகளின் இயல்புகளை அறிந்த மொழியியல்வல்லார், மொழியியலிலும்அவ்வியல்பானஎழுத்துக்கள்உளவாதலைக்கண்டனர். அகரம் முதல் ஔகாரம் இறுதியாக உள்ள எழுத்துக்களை உயிரெழுத்துக்கள் என்றும், ககரம் முதல் னகரம் ஈருக உள்ள எழுத்துக்களை மெய்யெழுத்துக்கள் என்றும் பெயரிட்டு வழங்கினர். மெய்யெழுத்துக்கள் இவ்வுயிரெழுத்துக்களின் துணையின்றி இயங்கா எனவும், உயிரெழுத்துக்கள் மெய்யெழுத்துக்களோடியையினும் தம்தன்மையி னின்றும் திரியா எனவும் கூறினர்.

"மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்"

"மெய்யோடு இயையினும் உயிரியல் திரியா"

எனத் தொல்காப்பியம் கூறுவது காண்க.

**சால்புடையார் கண்ணேட்டத்தில் :-**

உயிருக்கு இத்தகைய அருமையும், தகவும் இருப்பினும், சான்ருேர்கள் தாம் கொண்ட கொள்கைக்கும், பண்பு நலன்களுக்கும் இணையாக இதனைக் கருதிஞரல்லர். உயிர் தான் பெறவேண்டிய பண்பையும் பயனையும் பெற்றவழியே அது சிறப்புடைத்தாகக் கருதப் பெற்றது. அவற்றைக்காணுது இழுக்கியவழி அது ஒருபொருளாகக் கருதப்பெறவில்லை.

"உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சி கற்புச் சிறந்தன்று"

"புகழ்எனின் உயிரும் கொடுப்பர்"

"நாணுல் உயிரைத் துறப்பர் உயிர் பொருட்டால்
நாண் துறவார் நாணுள்பவர்"

"பிரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்க துடைத்து"

என வருவன காண்க.

**மெய்யுணர்வு உடையோர் நோக்கில் :-**

மெய்யுணர்வுடையோர் உயிரியல்பை நன்கு உணர்ந்திருந்தனர். அதனை வளர்க்கவே அவர்கள் அயராது உழைத்தனர்.

"உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"

என்பார் திருமூலரும். உயிர் எப்படிப்பட்டது? அதன்கண் உள்ள குற்றம் யாது? அதனை எங்ஙனம் போக்குதல் வேண்டும்? என்பன போன்ற உண்மைகளை முறையாக அறிந்தாலன்றி உயிரைவளர்த்தல் என்பது இயலாது. ஆதலால்தான் நம் சைவசித்தாந்தம் உயிரது இயல்பையும், அதற்குள்ள குறையையும், அது நீங்குதற்குரிய வழியையும், விரிவாகவும் தெளிவாகவும் கூறுகின்றது. முப்பொருள் உண்மை எனக் கூறப்படுவதும் இதுவே ஆகும். மெய்கண்டநூல்கள் பதினன்கனுள்ளும் இம்முப்பொருள் உண்மை பேசப்படுகின்றது. அவற்றின் இயல்பனைத்தையும் தொகுத்துக் காண்டல் பெரும்பயன் தருவதாகும். அம்முறையில் உயிரியல்பைத் தொகுத்துக் காண்பாம்.

**உயிர், ஆன்மா, பசு :-**

மெய்யுணர்வுடையோர் உயிரை ஆன்மா, பசு ஆகிய சொற்களால் பெரிதும் குறிப்பிடுவர். ஆத்மா என்னும் வடசொல் தமிழில் ஆன்மா என வழங்கும். ஆன் என்னும் வேர்ச்சொல்லிலிருந்து இது பிறந்தது என்பர். ஆத்மா - உயிர்ப்பது எனப்பொருள்படும். எங்கும் பரந்திருப்பது, அறிவு அறியாமை ஆகிய இரண்டுடன் கூடியது எனவும் இதற்குப் பொருள் கூறுவர். பசு என்பதும் வடசொல் ஆகும். பச் - பந்தித்தல்; உ: செயப்படுபொருள் விகுதி. எனவே இயல்பாகவே பாசங்களால் கட்டப்பட்டிருத்தலின் உயிர் பசு எனப்பட்டது.

**திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும் ;-**

மெய்கண்டநூல்கள் பதினன்கனுள் இவ்விரு நூல்களும் முந்தியவையாகும். இவற்றுள் முன்னையநூல் கருத்தைப் பின்னைய நூல் விளக்கவந்ததாகும். ஆதலின் உயிரைப்பற்றி இவ்விரு நூல்களும் ஒருபடித்தாகக் கூறும் கருத்துக்களை ஒருங்கு காணலாம்.

**கூடு :-**

மக்களின் இருக்கையை வீடு என்பர். பறவைகளின் இருக்கையைக் கூடு என்பர், தவமுனிவர் இருக்கையைக் குகை என்பர். வீடு குகை ஆகிய இரண்டிலும் கூடு சிறியதாகும்; மென்மையுடையதாகும். இது யாவரும் அறிந்ததொன்று. திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் ஆசிரியர்கள் உயிரைக் கூடு என உருவகம் செய்கின்றனர். உயிர் கூடு எனில் அதனில் உறையும்பொருள்ஒன்று வேண்டும்; அதுவே இறையாகும்.

வீட்டில் இருக்கில்என் நாட்டிலே போகில் என்
கூட்டில் வாள் சாத்தி நின்று உந்தீபற
கூடப் படாதது என்று உந்தீபற

என்பது திருவுந்தியார் ஆகும்.

மக்கள் இல்லறத்தில் இருப்பினும், துறவறத்தில் நிற்பினும் தாம் செய்யும் செயல்களைத் தம் உயிர்க்குயிராக விளங்கும் பரம்பொருளை முன்னிறுத்தி, அப்பரம்பொருளே உள்ளிருந்து அனைத்தையும் ஆற்றுவதன்றித் தம்மால் ஏதும் இல்லையென உணர்ந்து, அத்திருவருள் வழிச் செயற்படல்வேண்டும். அங்ஙனம் இன்றித் தன் முனைப்பால் செய்யின் பற்று அறுதலும் இல்லை; வீடுபேறும் கிட்டாதொழியும் என்பது கருத்தாகும். இதனையே திருக்களிற்றுப்படியாரும் தக்கன் வரலாற்றைச் சான்றுகாட்டி விளக்கியது.

வீட்டிலே சென்று வினையொழிந்து நின்றாலும்
நாட்டிலே நல்வினைகள் செய்தாலும் — கூட்டில்வாள்
சாத்தியே நின்றிலையேல் தக்கனார் வேள்விசெய்த
மாத்திரையே யாம்கண்டாய் வந்து.

என்பது அப்பாடலாகும். எனவே சிவபரம்பொருள் இருத்தற்குரிய உறையுளாக - கூடாக உயிர் விளங்கவேண்டும் என்பது கருத்தாகின்றது. 'பாழறை உனக்குப் பள்ளியறையாக்கி' என்றும் 'உடம்பெனும் மனையகத்துள்' என்றும் திருமுறை ஆசிரியர்கள் கூற, இவ்வருளாளர்கள் உயிரையே இருக்கையாக்கியிருப்பது உணர்ந்து தெளிதற்குரியதாகும்.

( வளரும் )


## " ஞானசம்பந்தம் "

தருமையாதீனத்திலிருந்து வெளிவரும் அரிய சமய இலக்கியத் திங்கள் இதழ். **ஆண்டுச் சந்தா** உள்நாடு ரூ. 9. ஸ்ரீலங்கா ரூ. 11. வெளிநாடு ரூ. 17. **ஆயுள் சந்தா** உள்நாடு ரூ. 100. வெளிநாடு ரூ. 125. முகவரி :— செயலாளர், "ஞானசம்பந்தம்" செயலகம், தருமபுரம், மாயூரம் 609 001, தஞ்சை மாவட்டம்.

# திருவைகல்மாடக்கோயில் திருப்பதிகம்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

**வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர்** எம். ஏ,

இத்தலம் மாயூரம் — கும்பகோணம் இருப்புப்பாதையில் ஆடுதுறை புகைவண்டி நிலையத்திற்குத் தெற்கே 6 கி. மீ. தூரத்தில் இருக்கிறது. ஆடுதுறையிலிருந்தும் கும்பகோணத்திலிருந்தும், வடமட்டம் செல்லும் பேருந்துகளில் ஏறிப் பழியஞ்சியநல்லூரில் இறங்கி நாட்டார்வாய்க்காலைக்கடந்து தெற்கே 1 கி. மீ. தூரம் சென்றால் இத்தலத்தை அடையலாம். புதூரில் நாட்டார்வாய்க்காலுக்கு வண்டிப்பாலம் உள்ளது. காரில்வருவோர் இவ்வழியே வரலாம்.

சோழநாட்டுக் காவிரித்தென்கரைத் தலங்களில் இது முப்பத்து மூன்றாவது தலம். தஞ்சை மாவட்டம் மாயூரம் தாலூகாவைச் சார்ந்தது இக்கிராமம். வைகல் என்பது ஊர்ப்பெயர். வைகல் என்னும் ஊரில் மாடக்கோயிலமைப்பில் விளங்குவதால் இத்தலம் வைகல் மாடக்கோயில் என வழங்கப்படுகிறது. வை – குறுமை, கல் – மலை. சிறியமலைபோலமைந்த செய்குன்றின்மேல் அமைந்த மாடக்கோயில் என்பது இத்தலப்பெயரின் பொருளாகலாம்.

தமிழ்நாட்டில் முடிமன்னர்களும் குறுநிலமன்னர்களும் மதியமைச்சர்களும் சேனாதிபதிகளும் முனிவர்களும் எடுத்த கோயில்கள் பல. அவற்றுள் இக்கோயில் சோழமன்னர்களில் கோச்செங்கட்சோழன் கட்டிய திருக்கோயிலாகும். முற்பிறவியில் சிலந்தியாயிருந்து திருவானைக்கா இறைவனை வழிபட்டு இறையருளால் அரசனாகப்பிறக்கும் பேறுபெற்றவர் இம்மன்னர். அறுபான்மும்மை நாயன்மார்களில் ஒருவராகப் போற்றப்பெறுபவர். முற்பிறவியில் தான் செய்ததொண்டுக்கு யானை இடையூறாக இருந்தகாரணத்தினால் யானைஏறாத மாடக்கோயில்கள் பலவற்றை இம்மன்னர் கட்டினார். ‘எண்தோள் ஈசற்கு எழில்மாடம் எழுபது செய்தார்’ என்று திருமங்கையாழ்வார் இவரைப் புகழ்ந்து பாடியுள்ளார். கோச்செங்கட்சோழரால் வைகல்மாடக்கோயில் கட்டப்பெற்றது என்பதை இத்தலத் தேவாரத்திருப்பதிகத்துள் திருஞானசம்பந்தர்,

மெய்யக மிளிரும்வெண் ணூலர் வேதியர்
மையகண் மலைமக ளோடும் வைகிடம்
வையகம் மகிழ்தர வைகல் மேற்றிசைச்
செய்யகண் வளவன்முன் செய்த கோயிலே.

கொம்பியல் கோதைமுன் அஞ்சக் குஞ்சரத்
தும்பிய(து) உரிசெய்த துங்கர் தங்கிடம்
வம்பியல் சோலைசூழ் வைகல் மேற்றிசைச்
செம்பியன் கோச்செங்க ணான்செய் கோயிலே.

என்ற பாடல்களால் தெளிவாக அருளிச்செய்கின்றார்.

**மூன்று கோயில்கள் :** வைகலில் சிவபிரானது மூன்றுகண்களைப் போல் மூன்று கோயில்கள் விளங்குகின்றன.

வலக்கண்போல் விளங்குவது அருள்மிகு விசாலாக்ஷி அம்பாள் உடனாகிய விசுவநாதர்கோயில். இக்கோயில் இருக்குமிடம் வளநகர் என வழங்கப்படுகிறது.

இடக்கண்போலத்திகழ்வது அருள்மிகுபிருகந்நாயகி(பெரியநாயகி) உடனாகிய பிரமபுரீசுவரசுவாமி திருக்கோயிலாகும். இக்கோயில் இவ்வூர் மக்களால் சிறப்பாகக் கொண்டாடப்பெறும் கோயிலாக விளங்குகிறது.

நெற்றிக்கண்போல இலங்குவது அருள்மிகு கொம்பியல்கோதை உடனாகிய வைகல்நாதர் எழுந்தருளி விளங்கும் மாடக்கோயிலாகும். இக்கோயிலே தேவாரத்திருப்பதிகம் பெற்ற கோயிலாகும். திருஞான சம்பந்தர் அருளியபடி இக்கோயில் ஊரின் மேற்கே அமைந்த மாடக் கோயிலாகத் திகழ்கிறது.

"வைகல் மேற்றிசைச் செய்யகண் வளவன்முன் செய்த கோயில்" எனவும், "வைகல் மேற்றிசைச் செம்பியன் கோச்செங்கணான் செய்கோயிலே" எனவும் இக்கோயில் இவ்வூரின் மேற்றிசையில் அமைந்து விளங்குவதைத் திருஞானசம்பந்தர்தேவாரம் தெளிவாகக் கூறுவதைக் காணலாம்.

இவ்வூரில் உள்ள மூன்று ஆலயங்களும் திருமால், பிரமன், திருமகள் ஆகியோராலும் இந்திரன் முதலான தேவர்களாலும் அகத்தியர் முதலிய முனிவர்களாலும் வழிபடப்பெற்ற பெருமைக்குரியன வாய்த் திகழ்கின்றன.

**புராண வரலாறு :** முன்னொருகாலத்தில் பூமிதேவி தன்னை விரும்பி மணம்செய்துகொள்ளுமாறு திருமாலை வேண்டினாள். அதற்கு இசைந்து திருமால் நிலமகளை மணம்புரிந்துகொண்டார். திருமகளுக்குத் திருமால்மேல் கோபம் உண்டாயிற்று. திருமகள் சண்பக வனம் என்னும் இத்தலத்தையடைந்து கடுந்தவம்புரிந்து பெருமானை வழிபட்டாள். திருமால் பூமிதேவி ஆகியோர் திருமகளை அடையும் பொருட்டுச் சிவபெருமானை வழிபட்டனர். திருமாலைத் தேடிவந்த பிரமனும் இத்தலத்தில் சிவபெருமானை வழிபட்டான். பெருமான் திருவருளால் திருமால் திருமகளையும் நிலமகளையும் தன் இருமனைவிய

ராகப்பெற்றார். பிரமனுக்கும் அருள்புரிந்தார் என்பது இத்தலத்தின் மூன்று கோயில்களையும் இணைத்துக்கூறும் புராண வரலாறுகும்.

தன்பிடியைத் தேடிவருந்திய களிறு ஒன்று ஈசற்புற்றைத் தன் கொம்புகளால் சிதைக்க, ஈசல்கள் தம்புற்றினை அழித்த யானையின் உடலைக் கடித்துக் கொன்றன. தன்களிற்றை ஈசல் அழித்ததைக் கண்டு வருந்திய பிடியும், யானையைக்கொன்ற ஈசல்களும் இத்தலத்து இறைவரை வழிபட்டு அருள் பெற்றன என்றும் தல புராணம் கூறுகிறது.

தலபுராணம் யாழ்ப்பாணம் சி. நாகலிங்கம் பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்று, தேவகோட்டை இலக்குமணன் செட்டியார் அவர்களால் வெளியிடப் பெற்றுள்ளது. இத்தலத்திற்கு வடமொழியில் சண்பகாரண்யம் எனவும், இராஜ்யலக்ஷ்மி பார்க்கவாலயம் எனவும், நித்தியவாசபுரம் எனவும், மும்மூர்த்தித்தலம் எனவும் பெயர்கள் வழங்குகின்றன.

**கோயிலமைப்பு :** 1. அருள்மிகு விசாலாக்ஷியம்பாள் உடனுகிய விசுவநாதர் திருக்கோயில் ஊரின்தென்புறம் உள்ளது. சிறியகோயில். ஒருபிராகாரம் உள்ளது. கோயிலுக்குள் விநாயகர் பாலசுப்பிரமணியர் சுவாமி அம்பாள் சண்டேசுவரர் உள்ளனர்.

2. மாடக்கோயில் ஊரின்மேல்பால் உள்ளது. அறநிலையத்துறையினரின் ஆட்சிக்கு உட்பட்டுத் திகழ்கிறது. சோழர்காலத் திருப்பணிக்குப்பின் கோயில் முற்றிலும் புதிதாகத் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. கிழக்குப்பார்த்த சந்நிதி. வைகல்மணுளன் என்ற அப்பர் திருவாக்கிற்கு ஏற்றபடி அம்பாள் சுவாமிக்கு வலப்பாகத்தில் கிழக்கு நோக்கி மணவாள கோலத்தில் விளங்குகிருர்.

கட்டைக்கோபுரத்தைக்கடந்து கோயில் வாயிலை அடைந்ததும் விநாயகர்சந்நிதி. வழிபட்டுக்கொண்டே கோயிலுக்குள் சென்றுல் மாடக்கோயில் என்ற பெயருக்கு ஏற்றவாறு பெரிய மேடைமீது கோயில் திகழ்வதைக்காணலாம். ஒரு பிராகாரம்மட்டுமே உள்ளது. சுவாமி அம்பாள் கோயில்களை வலம் வரலாம். மேற்குப்பிராகாரத்தில் கன்னிமூலையில் தலவிநாயகர் விளங்குகிருர். அடுத்து வள்ளி தெய்வயானை அம்மையாருடன் முருகன் காட்சிதருகிருர். அடுத்து சீதேவி பூதேவியுடன் வரதராசப்பெருமாள் விளங்குகிருர். அதை அடுத்துக் கஜலக்ஷ்மிகோயில். வடக்குப்பிராகாரத்தில் சண்டேசுவரர். கர்ப்பக்கிருகத் தெற்குக்கோஷ்டத்தில் தக்ஷிணுமூர்த்தி எழுந்தருளியுள்ளார். வலமாகவந்து கோயிலின் மகாமண்டபத்தை அடைந்து சுவாமிசந்நிதியை அடைவோம். இக்கோயிலில் உள்ள பழமையான விக்ரகங்கள் பாதுகாப்பிற்காகக் கோனேரிராஜபுரத்தில் வைக்கப்பெற்றுள்ளன.

சுவாமிசந்நிதி மிக்க தெய்விகப் பொலிவோடு திகழ்கின்றது. வழிபட்டுக்கொண்டே அம்பாள்கோயிலை அடைவோம். கொம்பியல் கோதை என்ற பெயருக்கு ஏற்றபடி அசைந்தாடும் பூங்கொம்புபோல அழகுறத் திகழ்கிறார். அம்மை திருப்பெயர் இத்தலத்தேவாரத் திருப்பதிகத்துள் குறிக்கப்படுகிறது. கிழக்குப் பிராகாரத்தில் சனி பகவான் பைரவர் சூரியன் உள்ளனர் உமாபதி சிவாசாரியார் அருளிய சிவக்ஷேத்திர சிவநாமக்கலி வெண்பாவில்,

"முல்லைமலர் வம்புலவும் வைகல் வளநகர்
மாடக்கோயிற் கொம்பிலிளங்கோதை வைகற்கோமானே"

என்று பெருமான் அம்பிகை திருப்பெயர்களை அருளிச்செய்கிறார்.

**மூர்த்திகள் :** சோழர்காலச் சிற்பங்களாக இன்று நமக்குக் காணக்கிடைப்பன விநாயகர் முருகன் அம்பாள் திருவுருவங்களாகும். திருவுலா மூர்த்திகளாகிய உற்சவ விக்கிரகங்கள் பாதுகாப்பில் உள்ளன. சுவாமி பெயர் அருள்மிகு வைகல்நாதர். வடமொழியில் ஸ்ரீ சண்பகாரண்யேசுவரர் என வழங்கப்படுகிறார். அம்பிகை பெயர் அருள்மிகு கொம்பியல்கோதை. கொம்பில் இளங்கோதை என்பன வாகும். வடமொழியில் சாகாகோமளவல்லி என வழங்கப்படுகிறார்.

**தலமரம் :** சண்பகம்; கோயிலில் இல்லை.

**தீர்த்தம் :** கோயிலின் வடபால் உள்ளது.

3. **பிரமபுரீசுவரர்கோயில் :** இக்கோயில் இன்று மக்களால் விரும்பி வழிபடப்பெறும் கோயிலாக உள்ளது. கோயிலின் எதிரே பிரமதீர்த்தம் விளங்குகிறது. சுவாமி கிழக்கு நோக்கியும் அம்பிகை தெற்கு நோக்கியும் உள்ளனர். ஒரே பிராகாரம்.

கொடிமரம் விநாயகர் நந்தி பலிபீடங்களை வழிபட்டுக் கொண்டே வலம் வரலாம். மேற்குப்பிராகாரத்தில் கன்னிமூலையில் விநாயகர் விளங்குகிறார். அடுத்து முருகனும், அடுத்து கஜலட்சுமியும் விளங்கு கின்றனர். கர்ப்பக்கிருகக் கோஷ்டங்களில் தக்ஷிணாமூர்த்தி துர்க்கை விளங்குகின்றனர். கிழக்குப்பிராகாரத்தில் நால்வர் நவக்கிரகங்கள் முதலிய மூர்த்திகள் உள்ளனர். சுவாமிஅம்பாள் சந்நிதிகளை இணைக் கும் அழகிய மகாமண்டபம் உள்ளது. சுவாமி பிரமதேவனால் பூசிக்கப் பெற்ற மூர்த்தி. நான்கு வேதங்களை மாலைகளாக்கி நான்முகன் பெரு மானுக்கு அணிவித்தான் என்னும் இத்தலபுராணத்துக்கு ஏற்பச் சிவலிங்க பாணத்தில் நான்கு வெண்கோடுகள் திகழ்கின்றன. சிவலிங்கத்திருவுருவம் மிக்க பழமையும் பெருமையும் அழகும் தெய்வி கமும் உடையதாகத் திகழ்கிறது. அம்பாள் அருள்மிகு பெரியநாயகி. சின்னஞ்சிறிய திருவுருவத்தோடு திகழ்கிறார். அருள்நலங்கனிந்த இச்சந்நிதியில் நம்மை நாம் மறந்து வழிபடலாம்.

# செய்திகள்

## ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

**திருக்கடவூரில் :**

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களது ஆண்டு ஜன்ம நக்ஷத்திர ஆயில்யத் திருநாள் வழிபாடு திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி திருக்கோயிலில் மிருத்யுஞ்ஜய ஹோமம். ஏகாதசருத்ரஜபம்முதலியவற்றுடன் 4-5-79ல் சிறப்பாகநடைபெற்றது. ஸ்ரீ அமிர்தகடேசுவரர் ஸ்ரீ அபிராமி அம்மை ஆகிய மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அர்ச்சனையும் ஸ்ரீ காலசம்கார மூர்த்திக்கு சகஸ்ரநாம அர்ச்சனையும் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் எழுந்தருளி வழிபாடாற்றி, ஜன்ம நக்ஷத்திர விழா மலராக சிவஞானபோதம் என்ற நூலை வெளியிட்டு அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள்.

**திருவைகல் மாடக்கோயிலில் :**

மாதந்தோறும் நடைபெறுவதுபோல் ஆயில்யத் திருநாள் வழிபாடு திருவைகல் மாடக்கோயில் அருள்மிகு கொம்பியல்கோதை உடனாகிய அருள்மிகு வைகல்நாதர் திருக்கோயிலில் 4—5—79 வெள்ளிக்கிழமை நண்பகல் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. வைகல்மாடக்கோயில் தலத்திருப்பதிகப் பாராயணமும் நிகழ்த்தப்பெற்றது. பதிகங்கள் அடங்கிய நூல் குறிப் புரையுடன் வெளியிட்டு வழங்கப்பெற்றது. வித்துவான் திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ., அவர்கள் பதிகக்கருத்துக்கள் பற்றியும் குடவாசல் மேல்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் சமய வாழ்வு பற்றியும் விரிவுரையாற்றினார்கள். அன்பர்கள் பலர் பங்குகொண்டு வழிபட்டுப் பயன்பெற்றனர்.

## சித்திரைத் திங்கள் பெருவிழா

**சீகாழியில் :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத்திங்கட்

பெருவிழாக் கொடியேற்றம் 1—5—79 செவ்வாய்க்கிழமையன்று நிகழ்ந்தது. அன்று முதல் பத்து நாட்கள் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. 2—5—79 அன்று திருமுலைப்பால் விழாவும், 4—5—79 அன்று வெள்ளிரதக் காட்சியும் 5—5—79 அன்று இடபவாகனருடராய் சகோபுரத்தில் எழுந்தருளும் காட்சியும், 6—5—79 அன்று திருக்கல்யாணமும், 8—5—79, 9—5—79 ஆகிய நாட்களில் திருத்தேர்ப் பெருவிழாக் காட்சியும் நடைபெற்றன.

2—5—79 அன்று சைவ சமயாசாரியர்களுள் முதலாமவராகிய திருஞானசம்பந்தருக்கு, பெருமான் உமாதேவியாருடன் பிரம்தீர்த்தக் கரைக்கு எழுந்தருளி திருமுலைப்பால் வழங்கிய காட்சி சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை திருஞானசம்பந்தருக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் முன்னிலையில் திருஞானசம்பந்தர் சிவிகையில் எழுந்தருளச் செய்யப்பெற்றது. அற்புத விளக்க விரிவுரையை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் தொடங்கிவைத்தார்கள். அறிஞர்கள் பலர் அற்புத விரிவுரையாற்றினர். பின்னர் பிரமதீர்த்தக்கரையில் நிகழ்ந்த திருமுலைப்பால் வழங்கும் காட்சியையும் பெருமான் உமாதேவியாருடன் இடபவாகனத்தில் எழுந்தருளிய காட்சியையும் பக்தர்கள் தரிசித்துப் பெரும்பயன் பெற்றனர்.

ஆண்டுதோறும் திருமுலைப்பால் விழாநாளில் பண்ணிசைவாணர் ஒருவருக்குப் பட்டமும் பொற்கிழியும் அளிக்கப்பெறுவதுபோல இவ்வாண்டு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவாவடுதுறை திரு. T. M. விசுவலிங்கம் அவர்கட்கு "திருமுறைக் கலாநிதி" என்ற பட்டம் அளித்து, பொன்னுடைபோர்த்தி, பண முடிப்பு வழங்கி ஆசி அருளினார்கள் பின்னர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் விழாவினைக் கண்டுகளித்துப் பயன்பெற்ற பெருமக்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசி அருளினார்கள்.

(வளரும்)

# எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

**சித்தார்த்திஸு வைகாசிமீ 1உ முதல் 31உ முடிய.**
**( 15—5—79 முதல் 14—6—79 முடிய )**

ஸ்ரீ சித்தார்த்திஸு சித்திரைமீ 31உ சோமவாரம் மூல நக்ஷத்திரம் பத்திரைகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 52 நாழிகை 31 விநடிக்கு மீன லக்கினத்தில் ஸ்ரீலோகரட்சகரான சூரிய பகவான் மேஷ ராசியிலிருந்து ரிஷபராசி சங்கிரமணமாக வைகாசிமீ பிரவேசம் செய்கிறார். வைகாசிமீ 1உ மங்களவாரம் விஷ்ணுபதி புண்ணியகாலமாகும். சங்கிரமகாலகிரகஸ்திதியின் பலனாவது லோக நாடுகளுக்கு பலன்கள் பல ஏற்படும். லோக நாடுகளில் வல்லரசுகள் தனது விசுவாசநாடுகள் எளிய நாடுகளுக்கு தொழில்துறை முன்னேற்றத்துக்கும் பொருளாதார உயர்வுக்கும் அனுகூல உதவிகள் செய்ய முன்வரும். ஆசியாவில் தெற்கு கிழக்கு நாடுகளில் எங்கும் பயங்கர நிலைமையும், பூமியதிர்ச்சி தீ இவற்றால் பொருள்சேதம், ஜனச்சேதம் ஆகிய இழப்பும் காணும். பண்டங்களின் விலைவாசி உயரும். தேசங்களில் ஜனத்தலைவர்கள் ஜனாதிபதிகள் பிரஜாநலம் காப்பர். ஈஸ்வரகிருபையால் ஆன்றோர்களின்முயற்சியில் தேசங்களில் எங்கும் தெய்வகைங்கரியங்கள் நற்காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும். உலகிலுள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் ஈஸ்வரகட்டளையின்படி வந்துள்ள சிவஞான குருமகான்கள் லோகத்துக்கு எடுத்தியம்புகின்ற நல்வழியில் இவ்வுலகம் இயங்கும். லோகசுபிட்சார்த்தமாக ஆங்காங்கு பிரார்த்தனை கூடங்களில் செய்விக்கின்ற யாகங்கள் வேத மந்திர தெய்வஸ்தோத்திரங்களின் பலனால் லோகம் க்ஷேமமாக விளங்கும். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் ஆறுகால பூஜைகள் சிறப்பாக நடைபெற்றுவரும். சகலமான பிரஜைகளும் தெய்வ பக்தி உடையவர்களாகி நெறியான நற்கிரியைகள் புரிந்து க்ஷேமகரமாக வாழ்வார்கள்.

**1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼**
( சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. - அ. )

மேஷராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் பணவரவும், சௌகரியமும் மேலாக இருந்துவரும். இல்லத்தில் மகிழ்ச்சிதரும் சம்பவங்கள் நடக்கும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் நற்கியாதி ஏற்படும். புத்திரனுக்கு இராஜாங்

கத்தில் நன்மை ஏற்படும். தாம்பத்தியவாழ்வில் சுமுகம் நிலவும். வைகாசிமீ 25உ 36நாழிகை 44 விஞடிமுதல் 27உ 50நாழிகை 23 விஞடி வரையில் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபமாகும்.

**2. ரிஷபம் :- கார்த்திகை $\frac{3}{4}$ - உரோகிணி – மிருகசீர்ஷம் $\frac{1}{2}$**
( இ. ஊ. ஏ. - ஒ. வ. வி. வூ - வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரபலஞகை நடந்துவரும். தேகம் உஷ்ஞதிக்கத்திஞல் பாதித்துக் குணமாகும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானங்கள் வந்துகொண்டிருக்கும். பூமி இயந்திரவகையில் அவசியமான செலவினை ஏற்படுத்தும். வித்தியாவியாபாராதி கலைத் துறைகளில் 19உ முதல் நற்பலன்களும் இஷ்டமான நவீன பொருள் வாங்குதல் ஆகும். புத்திரர் சௌக்கியம் தாரசௌக்கியம் நன்ருக இருந்துவரும். வைகாசிமீ 27உ 50 நாழிகை 23 விஞடிமுதல் 30உ 27 நாழிகை 36 விஞடிவரையில் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபமாகும்.

**3. மிதுனம் :- மிருகசீர்ஷம் $\frac{1}{2}$ - திருவாதிரை – புனர்பூசம் $\frac{3}{4}$**
( கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரபலஞகைநடந்துவரும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்கள் பல வகையில் வந்துகொண் டிருக்கும். பிதா மாதா இவர்களின் உடல்நலம் பாதித்து உடன் குணமாகும். வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில் மாதமுதலில் அதிருப்தியாக இருப்பினும் 19உ முதல் உழைப்புக்கேற்ற நன்மைகளை ஏற்படுத்தும். வீடுவாகஞதிகளில் இரணங்கள் தீரும். தாரசௌக் கியம் புத்திரர் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். வைகாசிமீ 3, 9, 31உகள் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபமாகும்.

**4. கடகம் :- புனர்பூசம் $\frac{1}{4}$ – பூசம் – ஆயில்யம்.**
( ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் பண சௌகரியம் மேலாக இருந்துவரும். சகோதரருக்கு இராசாங்க நன்மதிப்பு ஏற்படும். வீடு வாகன பிராப்தியில் சௌகரி யங்கள் மிகும். வித்துவத்துவம் கலைத்துறையில் பிரபல ஸ்திதியும் புகழும் உண்டாகும். இலட்சுமிகடாக்ஷமாக ஐஸ்வரியம் பெருகும். சகலமான காரியங்களும் ஜெயமுடன் நடந்துவரும். வைகாசிமீ 4உ 44 நாழிகை 54 விஞடிமுதல் 6உ 51 நாழிகை 1 விஞடிவரையில் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபமாகும்.

**5. சிம்மம் :- மகம் - பூரம் – உத்திரம் $\frac{1}{4}$**
( ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே. )

சிம்மராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் தஞதாயங்கள் சண்யத்துடன் வர்துகொண்டிருக்கும். சகோதர

ருக்குச் சௌக்கியபலன் தரும். 19உ அளவில் வித்தியாவியாபாரம் கலைத்துறைகளில் நற்பலன்வந்துசேரும். நூதனவஸ்துக்களின் பிராப்தியையளிக்கும். எல்லாக்காரியங்களும் சிறப்புடன் நடந்துவரும். தார சௌக்கியம் புத்திரர் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். வைகாசிமீ 6உ 51 நாழிகை 1 விஞடி முதல் 8உ 59 நாழிகை 8 விஞடிவரையில் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபமாகும்.

**6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½**

( டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ. )

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலஞக நடந்துவரும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானங்கள் வந்துகொண்டிருக்கும். சகோதரர் சகோதரிகளுக்குச் சுபம் தரும். வீடுவாகஞதிகளின் சௌகரியம் நன்ருக இருந்துவரும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் 19உக்குமேல் நன்மைகள் ஏற்படும். புத்திரர்களின் முன்னேற்றத்திற்காகச் சொற்பபொருள் முடங்கும். தாம்பத்தியவாழ்வில் சுமுகம் நிலவும். வைகாசிமீ 8உ 59 நாழிகை 8 விஞடி முதல் 11உ 11 நாழிகை 42 விஞடி வரையில் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபமாகும்.

**7. துலாம் :- சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾**

( ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே. )

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலஞக நடந்துவரும். குடும்பாபிவிருத்தியில் வரவேண்டிய பொருள்கள் வேண்டிய சமயத்தில் வந்து சேரும். வித்துவத்துவத்திலும் கொடுக்கல்வாங்கல் லேவாதேவிகளிலும் நல்ல நிலைமையை உருவாக்கும். சகோதரர் நலம் சாதாரணமாக இருந்துவரும். புத்திரர் பௌத்திரர்கள் க்ஷேமமாக இருந்துவருவார்கள். தாம்பத்தியவாழ்வில் சுமுகம் நிலவும். வைகாசிமீ 11உ 11 நாழிகை 42 விஞடி முதல் 13உ 30 நாழிகை 1 விஞடி வரையில் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

**8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் – கேட்டை.**

( தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு. )

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிர பலஞக நடந்துவரும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானங்கள் கௌரவத்திற்கு ஏற்ப வந்துகொண்டிருக்கும். எல்லாவிஷயங்களிலும் உள்ள மந்தநிலைமை மாறுவதாகி 19உ அளவில் பிரகாசம் ஏற்படும். வாகன பிராப்தியில் சாதாரண பலஞக இருந்துவரும். கால்நடை ஜீவனுக்கு விஷம் தீண்டும் புற்றுக்குப் பால்வார்க்க அது நீங்கும். வைகாசிமீ 13உ 30 நாழிகை 1 விஞடி முதல் 15உ 54 நாழிகை 22 விஞடி வரையில் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபமாகும்.

**9. தனுசு :- மூலம் , பூராடம் – உத்திராடம் $\frac{1}{4}$**
(யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானங்கள் திருப்தியளிக்கும். சகோதரர்களின் ஒத்துழைப்பு பந்து அம்மான்களின் பிரீதி மகிழ்ச்சியளிக்கும், வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில் பிரசித்தம் ஏற்படும். இரணம் ரோகம் நிவர்த்தியாகும். தார சௌக்கியம்புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும் வைகாசிமீ 15உ 54 நாழிகை 22 விளுடி முதல் 18உ 22 நாழிகை 52 விளுடி வரையில் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபமாகும்.

**10. மகரம் :- உத்திராடம் $\frac{3}{4}$ – திருவோணம் – அவிட்டம் $\frac{1}{2}$**
(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகர ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடந்து வரும். குடும்ப அபிவிருத்தியில் ஓரளவிற்கு சௌகரியங்களும் பணவசதியும் திருப்திகரமாக இருந்துவரும் சகோதரர் சௌக்கியத்துடன் இருந்துவருவார். வியாபாரம் வைத்தியம் சித்திரக்கலையில் 19உ க்கு மேல் பண வருமானங்களை ஏற்படுத்தும். புத்திரனுக்கு உஷ்ணுதிக்கத்திஞல் நலிவு ஏற்பட்டு உடன் குணமாகும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனை செய்ய நலம்தரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். வைகாசிமீ 18உ 22 நாழிகை 52 விளுடி முதல் 20உ 51 நாழிகை 45 விளுடி வரையில் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபமாகும்-

**11. கும்பம் :- அவிட்டம் $\frac{1}{2}$ – சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$**
(கு, கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)

கும்ப ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பண விஷயத்தில் இரணுதிக்கம்போல் தோன்றினும் தக்க சமயத்தில் கணிசமாகப் பொருள் வந்துசேரும். மனோதைரியம் மேலிடும். சகலகிரியைகளும் மேம்பாடாக நடந்துவரும். புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். தாம்பத்திய வாழ்க்கை சாதாரணமாக நடந்துவரும். வைகாசிமீ 20உ 51 நாழிகை 45 விளுடி முதல் 23உ 16 நாழிகை 39 விளுடி வரையில் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபமாகும்.

**12. மீனம் :- பூரட்டாதி $\frac{1}{4}$ – உத்திரட்டாதி – ரேவதி.**
(தி. - து: ஸ. ச. த. - தே. தோ. ச. சி.)

மீன ராசி 9 பாதங்களும் சுப பலனுக நடந்துவரும். குடும்பாபிவிருத்தியில் தந்தி சௌகரியங்களில் நல்ல நிலைமையாக இருந்து வரும். சகோதரர் நலம் நன்ருக இருந்து வரும். 19உ க்கு மேல் வீடு வாகனங்களில் புத்திரனின் சௌகரியங்களில் மன உவகைக்குரிய நிலைமையை ஏற்படுத்தும். தாம்பத்திய வாழ்வில் அபிலாஷை மேலிடும். வைகாசி மீ 23உ 16 நாழிகை 39 விளுடி முதல் 25உ 36 நாழிகை 44 விளுடி வரையில் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

# வைகாசி மாதச் சிறப்பு நாட்கள்

15—5—79 செவ்வாய், விஷ்ணுபதி புண்யகாலம், சங்கடகர சதுர்த்தி, திருவையாறு மாதப்பிறப்பு தீர்த்தம்.

16—5—79 புதன், தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் மகோற்சவ திருத்தேர்

17—5—79 வியாழன், தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் மகோற்சவதீர்த்தம். தருமையாதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ ஆதி குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை. அன்று மாலை 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் காவிரியில் திருமஞ்சனம் செய்து குருமூர்த்தங்களை வழிபடுதல், இரவு திருமெய்ஞ் ஞானப்பாவாடையுடன் குருபூஜை வழிபாடு. ஸ்ரீ ஞான புரீசுவரசுவாமி துவஜாவரோகணம்.

18—5—79 வெள்ளி, தருமையாதீன மடாலயத்தில் மாகேசுவர பூஜை இரவு 26ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பட்டணப்பிரவேசம்.

23—5—79 புதன், பிரதோஷம்.

24—5—79 வியாழன், மாதசிவராத்திரி. கழற்சிங்க நாயனர் குருபூஜை.

25—5—79 வெள்ளி, வேலூர் கிருத்திகை தருமபுரம் ஸ்ரீ சண்முகர் கிருத்திகை அபிஷேகம், சர்வ அமாவாசை.

28—5—79 திங்கள், அக்னி நக்ஷத்திர நிவிருத்தி, 47-3.

29—5—79 செவ்வாய், நம்பியாண்டார்நம்பி குருபூஜை.

30—5—79 புதன், ஆச்சாள்புரம். திருக்குவளை. வைத்தீஸ்வரன் கோயில், மதுரை, மாயூரம் முதலிய தலங்களில் வைசாக உற்சவாரம்பம், நமிநந்தி அடிகள் நாயனர், சேக்கிழார் சுவாமிகள் குருபூஜை.

31—5—79 வியாழன், திருமாகாளத்தில் சோமயாஜி யாகம், சோமாசிமாற நாயனர் குருபூஜை.

3—6—79 ஞாயிறு, வைகாச உற்சவ ரிஷபவாகனக் காட்சி.

4—6—79 திங்கள், 24 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை.

8—6—79 வெள்ளி, வைத்தீசுவரன்கோயில், ஆச்சாள்புரம் முதலிய இடங்களில் வைசாக உற்சவதீர்த்தம், வைகாசி விசாகம். சீகாழி திருஞானசம்பந்தருக்கு ரக்ஷாபந்தனம், பிரதோஷம்.

10—6—79 ஞாயிறு, பௌர்ணமி, மாதபூஜையில் சந்தனம் சாத்துதல். ஆச்சாள்புரம் ஸ்ரீ தோத்திரபூர்ணம்பிகா உடனுகிய திரு ஞானசம்பந்தருக்குத் திருக்கல்யாணம். இரவு மணி 4-க்கு மேல் ஜோதி தரிசனம் ஐக்கியம்.

11—6—79 திங்கள், சீகாழி, காரைக்கால் தருமபுரம் திருஞானசம்பந்தர் அபிஷேகம், ஐக்கிய உற்சவம் (மூலம்). திருஞானசம்பந்தர், முருக நாயனர், திருநீலநக்க நாயனர், திருநீலகண்டயாழ்ப் பாணர் ஆகியோர் குருபூஜை.

12—6—79 செவ்வாய், திருப்பனந்தாள் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மாகேசுவர பூஜை, திருக்கடவூர் முனீசுவர பூஜை.



தருமையாதீனம்
ஸ்ரீ ஞானாம்பிகை உடனாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர்
திருத்தேரில் உலாக்கொண்டருளுதல்.

Printed & Published by V. Ramaiah Pillai Manager Dharmapuram Adhinam.